திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 05 மே 2006

நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது,
பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி,
குடி புறந்தருகுவை ஆயின், நின்
அடி புறந்தருகுவர், அடங்காதோரே.

புறம்-35

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

மே-06

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம்.நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி.வீரணன் | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம், பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 100
பகுதி : 05
மே 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | ரூ. |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்


**இதழ்மணம்** 546

**வெள்ளைக் குடிநாகனார்** 547
இரா. சதாசிவம்

**வாழ்ந்து காட்டிய வழிகாட்டி** 549
பேராசிரியர் சா. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

**வடகேரளத்தில் கண்ணகி கோயில்** 561
முனைவர் கோ.வே. கீதா

**பழனிமலைத் தொடர் வாழ் பழங்குடி மக்கள் வாழ்வில் சேர நாட்டின் தாக்கம்** 570
ஆதி பாலசுந்தரன்

**பாரதிதாசனும் இதழ்களும்** 580
முனைவர் நெல்லை ந. சொக்கலிங்கம்

# இதழ்மணம்

இந்த இதழில் திருவனந்தபுரம் அருகில் உள்ள காஞ்சீரம்குளம் அரசு கல்லூரி முதல்வர் முனைவர் கோ.வெ.கீதா, "வடகேரளத்தில் கண்ணகி கோயில்" என்னும் கட்டுரை அளித்துள்ளார்கள். கண்ணகி வழிபாடு கேரள நாட்டில் மரபு வழியாக மக்கள் வழிபாட்டில் இடம் பெற்றிருப்பதை தெளிவுறுத்தியுள்ளார். சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும் அதை அந்த மக்கள் உரிமையோடு வழிபட்டு வருவதையும் அங்கு கண்ணகிக்குரிய கோயில்களையும் இன்றும் அங்கு கண்ணகி வரலாற்றோடு அக்கோயில் திருவிழாக்களும் மரபுகளும் அமைந்திருப்பதை ஆசிரியர் தெளிவுறுத்தியிருப்பது நம்மையும் ஒருமுறை அங்கு சென்று வழிபடத்தூண்டுகிறது.

அடுத்துப் பேராசிரியர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம் "வாழ்ந்து காட்டிய வழிகாட்டி" என்னும் கட்டுரை பாரதியின் எழுத்தும் வாழ்வும் சட்டத்தைப் புரிந்து மதித்து வாழ்கின்ற மக்கள் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதில் அவருக்கிருந்த நாட்டத்தை வெளியிடுகிறது. தனி மனிதனும் சமுதாயமும் ஒருமைப்பாடுடையதாக சட்டம் ஒழுங்கை மதித்துப்போற்றி வாழ்வதன் மூலம் ஒரு சமுதாயத்தின் மதிப்பை உயர்த்த முடியும் என்பதைத்தெளிவுறுத்துகிறார். பாரதியின் அறிவியல் கோட்பாடு, மொழிக்கோட்பாடு அரசியல் கோட்பாடுகளை ஆசிரியர் விளக்கும் திறம் அவருடைய ஆழமான கல்வி சார்ந்த பயிற்சி சிந்தனை வெளிப்பாடு. பாரதி இலக்கியத்தில் ஆசிரியர் ஆழமும் பரப்பும் நிறைந்த சிந்தனையை வெளிப்படுத்தி இருப்பது கற்போருக்குத் தெளிவும் இன்பமும் அளிக்கும்.

# வெள்ளைக் குடிநாகனார்

## உழவர் குடிமக்களும் உலக வணிகமும்

இந்திய நாட்டு உழவர்கள் கடனில் பிறந்து கடனில் வாழ்ந்து கடனால் மடிகிறார்கள் என்று இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு செய்தியுண்டு. காலங் காலமாக இந்திய நாட்டு உழவர்கள் அறியாமை, வறுமை, ஏழ்மை, பற்றாக்குறை, போதிய உணவின்மை, நோய் என்று பலவகையான துன்பச் சூழலில் சிற்றூர்களில் மழையை நம்பி வறுமையில் வாழ்ந்து மடிகிற அவலம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இக்காலத்தில் உலக மய வாணிகம் என்ற பெயரில் இந்திய நாட்டு உழவர் குடிமக்கள் பத்துகிராம் வெண்டைக்காய் விதையை நூறு ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள். வாணிகச் சந்தையில் உழவன் வாங்கும் பொருளுக்குப் பெருவிலையும் அவன் விற்கும் பொருளுக்குச் சிறு விலையுமாக இருப்பது இன்றைய நிலை; உலகம் எங்கிலும் உழவுத்தொழில் லாபமில்லாத தொழிலாக மாறி வருகிறது; செல்வம் மிக்க நாடுகள் உழவுத் தொழிலுக்கு பெரும் அளவில் உதவித் தொகை அளித்து உழவுத் தொழிலையும் உழவர்களையும் பாதுகாக்கின்றன. இந்திய நாட்டில் விழிப்பின்மையால் பெரும்பான்மை மக்கள் செய்யும் தொழில் நட்டத்தில் நடைபெறுவதால் பெரும்பான்மையான மக்கள் நோயிலும் சுகாதாரக்கேட்டிலும் சிக்கித் தவிக்கிறார்கள்; அவர்களுடைய குழந்தைகள் கல்வியின்றி வாடுகிறார்கள்; இச்சூழலில் சங்ககாலத்துச் செய்தி ஒன்று நினைக்கத்தகும். "அவனை வெள்ளைக் குடி நாகனார்பாடி, பழஞ் செய்க்கடன் வீடு கொண்டது" எனப் புறநானூறு முப்பத்தைந்தாம் பாடலின் அடிக்குறிப்பில் உள்ள செய்தி சிந்தனைக்குரியதாகும். மிகப் பழங்காலத்திலேயே மக்கள் நல அரசாக தமிழகத்தில் அரசியல் நெறி அமைந்திருப்பதை இவ்வரிகள் நமக்கு நினைவூட்டுகின்றன.

பாடலின் கண் ஆசிரியர்,
"பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்று சால் மருங்கின் ஈன்றதன் பயனே" என
அறிவுறுத்துகின்றார். மேலும்,
"நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை ஆயின் நின்
அடிபுறந்தருகுவர் அடங்கா தோரே" என
எடுத்துரைக்கிறார்.

காவிரி நாடன் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவன் சோழநாட்டில் காவிரி பொய்த்து உழவர்கள் வறுமையுற்று வாடியது அறியாது துன்புறுத்தினான். அதனை அறிந்த வெள்ளைக்குடி நாகனார் என்னும் சான்றோர் அவனைநோக்கி "நின் போர் செய்யும் படை தரும் வெற்றியும் உழுகின்ற கலப்பை நிலத்தின் கண்ணே ஊன்று சாலிடத்து விளைந்த நெல்லினது பயன்; அதனை நன்றாக அறிந்தனை யாயின் நீயும் குறளை கூறுவாரது உறுதியில்லாத வார்த்தையை உட்கொள்ளாது ஏரைப் பாதுகாப்பாருடைய குடியைப் பாதுகாப்பாயாயின் நின் அடியைப் போற்றுவர் நின் பகைவர் என அறிவுறுத்துகிறார்.

காலம் சுழன்று இரண்டாயிரம் ஆண்டுகள் ஓடிவிட்டன. உழவர்களுக்கு நிரந்தரமான பொருளாதாரப் பாதுகாப்பு நெறி முறைகள் வந்தபாடில்லை; உலகத்தில் பொருளாதார மாற்றம் நிகழும் போதெல்லாம் உழவர்கள் தான் ஏழ்மைநிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தற்போது உலகமயம் என்ற பொருளாதாரமும் உழவர்களுக்கே கேடு சூழ்கிறது. மக்கள் நல அரசும் கல்வியாளரும் சிந்திப்பாராக.

# வாழ்ந்து காட்டிய வழிகாட்டி

பேராசிரியர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்
மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,
பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

## முன்னுரை

இதுவரை உலகம் கண்ட மானுட வரலாற்றில் கடந்த இருபதாம் நூற்றாண்டு பல சிறப்புகளைப் பெற்றது. உலகப் போர்கள் என்ற கரும்புள்ளிகளைத் தவிர அந்த நூற்றாண்டில் உலகெங்கும் ஏற்பட்ட மாற்றங்கள். வளர்ச்சிகள், மறுமலர்ச்சிகள், சீர்திருத்தங்கள், அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, சமுதாயம், அறிவியல், இலக்கியம் ஆகிய அனைத்துப் பிரிவுகளிலும் முன்னேற்றங்கள் பரந்து காணப்பட்டன. நமது இந்திய தேசத்தைப் பொறுத்த வரையில், ஆங்கிலேயரிடமிருந்து விடுதலையானது, குடியரசானது மேற்கண்ட வளர்ச்சிகள், மாற்றங்கள் எல்லாம் பல்முனை நோக்கில் சென்றது. இவற்றிற்கெல்லாம் ஒரு அச்சாணியாக இருந்து சிந்தனைகளுக்கு புது வடிவம் கொடுத்த சீர்திருத்தவாதிகள், சான்றோர்கள், சிந்தனையாளர்கள், அறிஞர்கள் இப்படி பலரை அழைக்கலாம். அப்படியானவர்களின் வரிசையினின்றும் தனித்து நின்றவர் பாரதியார். பாரதியின் பன்முகப் பார்வைகளில் 'அரசியல் கோட்பாடு'. 'மொழிக் கோட்பாடு' அறிவியல் கோட்பாடு என்ற கோட்பாடுகளை இக்கட்டுரையில் காண்கிறோம்.

## அரசியல் கோட்பாடு

பாரதியின் அரசியல் சிந்தனை மாறுபட்டது அரசியலை சமூகத்துடன் பின்னிப் பிணைத்த ஒரு முழுமையான சமூகசீர்திருத்தவாதியாக விளங்கினார். இது அக்கால விடுதலைத் தாகம் கொண்ட சீர்திருத்தவாதிகள் பலரது கோட்பாடுமாகும். மூட நம்பிக்கைகளிலும் சமூகக் கொடுமைகளாலும் முடங்கியிருக்கும் ஒருவன் ஆட்சியாளரிடமிருந்து உரிமைகளையும் சலுகைகளையும் எப்படிப்

பெறமுடியும் என்பது அவரது கேள்வி. அதனால் 'அரிசனன் எனப்பாராது. கரிசனத்துடன் (கனகலிங்கத்தை) தரிசனம் செய்த பாரதி', தேசிய உணர்வு இன்றி அரசியல் விடுதலை இல்லை சாதி உணர்வு இருக்குமிடத்தில் தேசிய உணர்வு இல்லை என்று குறிப்பிடுகிறார்.

'பாரதி' என்ற பெயரைக் கேட்ட உடனேயே நமது நினைவுக்கு நாட்டுப்பற்று, மொழிப்பற்று பெண்விடுதலை ஆன்மீகம், இலக்கியப்புதுமை, உலகளாவிய பார்வை எனப்பல. ஆனால் 22 வயது இளைஞன் முதலில் அறிமுகமாவது ஒரு சமூக சீர்திருத்த வாதியாகத்தான். 1904 டிசம்பர் மாதம் சர்.வி.சங்கரன்நாயர் தமது உரையொன்றில் நாட்டிலிருக்கின்ற சாதிமுறை, சமத்துவத்திற்கும், சகோதரத்துவத்திற்கும், எதிராக உள்ளது என்று கூறினார். அதை எதிர்த்து (THE HINDU) இந்து பத்திரிக்கையில் ஒரு வாசகர் கடிதம் எழுதினார். அந்த வாசகரின் கடிதத்திற்கு எதிராக – சங்கரன் நாயருக்கு ஆதரவாக – இளைஞன் பாரதி அதே இந்து பத்திரிக்கையில் மறுப்புக் கடிதம் எழுதினார். அதில் "பெரும் கொடையாளியான பறையன் ஒருவனை, பிராமணத் தரகனைவிடத் தாழ்ந்தவன் என்று கருதும் விந்தையான முறை இது" (The wonderful System which makes a pariah philanthropist inferior to Bhramin go - between) என்று சாதிமுறையை எள்ளி நகையாடுகிறார். சரியாக 100 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாறு கூற எவ்வளவு துணிச்சல் வேண்டும். இந்த துணிச்சல்தான் பாரதியின் அரசியல் கோட்பாடுகளுக்கு துணையாக இருந்தது.

*"மண் நோக்கி வாழ்ந்த மனிதரிடையே*
*விண் நோக்கி வாழ்ந்த பாரதி,*
*தமிழ்மண் கருக்கொண்டு ஈன்ற புயல்காற்று;*
*அமைதிக் கிளைகள் விரித்த நெருப்புப் பூ; உமி*
*மலைகளிடையே ஓங்கிய நன்மலை;*
*பின்னமதி நடுவில் பிறந்த முழுஎண்*
*சின்ன மானிடரிடைச் சீர்த்தெழுந்த ஆண்*
*ஔவை"*

பாரதி எல்லா சமுதாய அரசியல் அமைப்புகளின் அடிப்படையும் அச்சமுதாயத்தில் வாழும் தனி மனிதர்களது நற்குணங்களையே சார்ந்திருக்கிறது என்றும், சட்டத்தின் மூலமாக ஒரு நாடு பெருமை அடைந்து விடுவதில்லை அந்நாட்டு மக்கள் பெருமை மிக்கவர்களாகவும், நல்லவர்களாகவும் இருப்பதில்தான் பெருமை அடைகிறது என்கிறார். அரசியல் சீர்திருத்தத்திற்கு அடிப்படையாக அமைவது தன்மானமுள்ள, தன்னம்பிக்கையுள்ள, மனிதத்தன்மையுள்ள, சுதந்திர மனிதர்களாக இருப்பது ஒன்றே எனக் கொண்டவர். வேறொருவர் இடும் ஆணையால் ஏற்படும் முன்னேற்றங்கள் எல்லாம் நிரந்தரமற்றவை. மதிப்பற்றவை – இதை மனதிற்கொண்டு சுதந்திரம், சமத்துவம் என்ற கோட்பாடுகளை தனது எழுத்தின் மூலம் உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டார். 'நம்மவர்கள் செய்யும் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டியவர்களும் நம்மவர்களேயன்றி பிறரில்லை என்கிறார்.'

## புதிய உத்திகள்

அரசியல் கோட்பாடுகளை மக்களிடம் பரப்ப பாரதி கையாண்ட உத்திகள் பல; அவற்றுள் தற்கால இழிநிலையை இகழ்ந்து, எதிர்காலத்தை மனக்கண்முன் கொண்டு வந்து காட்டுதல், தேசத்தின் பெருமைகளை எடுத்துரைத்தல். சிந்தனையையும் உணர்ச்சியையும் வீரமுள்ளதாக தூண்டுதல் போன்றவைகளால்தான் ஒரு மனவியல் நிபுணர் (Psychologist) போன்று கவிதைகளின் வழியே எழுச்சியை உண்டாக்கினார். அன்னியர் ஆட்சியில் அடிமைப்பட்டுக்கிடந்த நாட்களில் வாழ்ந்த பாரதி, தன் கனவுலகில் சுதந்திர இந்தியாவில் வாழ்ந்தும் காட்டி மற்றவர்களுக்கு வழி காட்டியாகவும் இருந்தார்.

*"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்*
*எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு*
*சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே -*
*இதைத்*
*தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே"*

என்று பாடி வல்லாண்மைமிக்க வெள்ளையரின் ஆதிக்கத்தை

வேரோடு சாய்க்கத் துடித்த சுதந்திர வீரர்களுக்கு தாரகமந்திரம் ஓதிய வீரக்கவிஞர் பாரதி.

இத்தகைய புதுமையுத்தி தூங்கிக் கிடக்கும் இந்திய மக்களிடையே ஒரு குறிக்கோளைக் கொடுத்து அம்மக்களை ஆர்வமுடன் சிலிர்த்தெழுந்து அவ்விலக்கை நோக்கி வழிநடத்திட பாரதிக்கு உதவியது.

## புயல் காற்று

மாணிக்க வாசகர், இறைவனைத் துயிலெழுப்பத் திருப்பள்ளி எழுச்சி பனுவல்களைப் பாடியது போல தூங்கிக்கிடந்த பாரதத்தைத் தட்டி எழுப்ப பாரதமாதாவை தெய்வமாக்கி திருப்பள்ளி எழுச்சி பாடியவர் பாரதி. சாதிமத பேதமின்றி ஒருதாய் மக்கள் என்ற உணர்வோடு ஒன்றுபட வேண்டும் என்ற தேசிய ஒருமைப்பாட்டையும் ஊட்டினார். இந்த உணர்ச்சிக்கு வடிவமாக 'செப்பும் மொழி பதினெட்டுடையாள் ஆயினும் சிந்தனை ஒன்று உடையாள்' என்றும் இந்தியா, 'இந்திய மக்கள் அனைவருக்கும் சொந்தம்' என்று முதன்முதலில் உரிமைக்குரல் எழுப்பினார். அன்னியருக்கெதிராக இந்தியாவில் தேசிய உணர்ச்சி விழித்தெழுந்த போது இந்தியா தனது தேசிய கௌரவத்தினை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. முதலில் ஆங்கிலேயருக்கு இந்த நாட்டின் பெருமை, பண்பாட்டை முதலில் உணர்த்த வேண்டி தனது பாடல்களின் மூலம் காட்ட முற்பட்டார்.

*"ஞானத்திலும், மோனத்திலும்,*
*அன்னதானத்திலும், கானத்திலும்,*
*கவிதையிலும், தீரத்திலும்,*
*உள்ளத்திண்மையிலும் சிறந்த நாடு"*

என நீண்ட பண்பாட்டினை பட்டியலிட்டு பறைசாற்றுகிறார். 'மாமுனிகள் பலர் வாழ்ந்த நாடு' ஞானம் பொலிந்த நாடு என்றும் இந்த நாட்டின் பழம்பெருமையை எடுத்துக்கூறி மக்களின்

தன்மான உணர்ச்சியை எழுப்பினார். சுதந்திரப் போராட்ட உணர்வைத் தூண்ட அவர்களை எழுச்சி மிக்கவர்களாக்கிட பாரதப் பண்பாட்டோடு ஒட்டியிணைந்த மரபுகளுக்கு தனது கவிதைகளால் உயிரோட்டம் கொடுக்கிறார்.

இத்தகைய பெருங்கவிஞர் ஒருவர் தமிழ் மண்ணில் தோன்றியது தமிழ் இனத்துக்குப் பெருமை; தமிழ் மரபுக்கு உரிமை; விடுதலை எதைப்பற்றியது ஆனாலும் – நாடு, இனம், மொழி, சமயம், பொருளாதாரம் என்ற இதனுள் எதுவாயினும் – அதன் பொருள் புறச்சக்திகளிலிருந்து – அழிவுச் சக்திகளிலிருந்து – நாட்டை மீட்பது முன்னோக்கிய வழியில் அதை மடைமாற்றுவது மக்களை ஒன்றுபடுத்தி அவர்களை செயல்பட வைப்பது என்பதாகவே இருக்கவியலும்.

## மொழிக் கோட்பாடு

*"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்*
*வாழிய பாரத மணித்திரு நாடு - என்றும்*
*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே"*

என்று தமிழ்மொழிக்கு முதன்முதலில் வாழ்த்துப் பாடியவர் பாரதியே. ஆங்கிலேயர் ஆட்சியும், ஆங்கிலத்தின் அதிகாரச் செல்வாக்கும் கொடிகட்டிப் பறந்த அந்தக் காலத்தில்,

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்*
*இனிதாவது எங்கும் காணோம்" -, என்றும்*
*"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்*
*இங்கமரர் சிறப்புக் கண்டார்"*

என்று தமிழின் சிறப்பினை எடுத்துரைக்கவும், தமிழ்ச் சமுதாயத்தையும், தமிழைப்புறக்கணிப்பதையும் எதிர்த்துப் பாடினார்.,

*"வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ,*
*வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ"*

என்று கூறவும் அன்றைக்கு எத்தனைக் கவிஞர்களுக்கு துணிவு இருந்தது பாரதியைத் தவிர? இன்றைய தனித்தமிழியக்கங்கள் அனைத்திற்கும் பாரதியின் வரிகள் அல்லவா தாரகமந்திரமாக உள்ளது தாய்மொழிப்பற்று என்பது அயல்மொழி வெறுப்பாக மாறக்கூடாது தனித்தமிழியக்கம் என்பது பிறமொழி ஒழிப்பியக்கமாகவும் மாறக்கூடாது. தமிழ் மக்கள் தமிழில் கற்க வேண்டும் தமிழைக் கற்கவேண்டும் வாய்ப்பும் தேவையும் விருப்பமும் ஆற்றலும் உள்ளவர்கள் தமிழ் மொழியோடு பிறமொழிகளையும் கற்பது நல்லது – கற்கவும் வேண்டும். இதனால் தமிழ் தாழ்ந்து விடாது மேம்படும். தமிழர்கள் மாறிவிட மாட்டார்கள் பயனடைவர். இக்கருத்துக்களைத்தான்,

*"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"*

என்றும்,

*"................நன்மையும் அறிவும்*
*எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும்*
*மற்றவை தழுவி வாழ்வீ ராயின்*
*அச்ச மொன்று இல்லை"*

என்று தெளிவுபடக் கூறுகிறார். மேலைநாட்டில் மலரும் புதிய கண்டுபிடிப்புகள், அறிவியற் கலைகள். தொழிற் புரட்சிகள் எல்லாம் தமிழ் மண்ணில் வளரவில்லையே என்று துயருற்ற பாரதி, அப்புதுக் கருத்துக்களை, அறிவியல் செய்திகளை தமிழ் மக்களுக்கு தாய்மொழியில் எடுத்துச் சொல்லி விளங்க வைத்திட,

*"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்*
*என்கிறார்."*

## பழம்பெருமை

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியம், கற்றறிந்தார் ஏத்தும் சங்கப் பாடல்கள், நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், தத்துவமுள்ள சித்தர் பாடல்கள் – இப்படி இவற்றின்

பெருமைகளை நமக்கு நாமே சொல்லிக் கொண்டிருப்பதை விட நமது இலக்கிய இலக்கணப் பெருமைகளை உலக மொழிகளிலே எடுத்துக் கூறி வெளிப்படுத்த வேண்டும் என்பதை,

*"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்*
*சொல்வதிலோர் மகிமை இல்லை*
*திறமான புலமையெனில் வெளிநாட்டார்*
*அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"*

என்று தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவவேண்டும் என்கிறார்.

## பாரதியே தமிழ்

தமிழ் இலக்கிய உலகில் கடந்த நூற்றாண்டில் இராமலிங்க அடிகளின் அருட்பாவும் பாரதியின் உணர்ச்சிக் கவிகளுமே கோலோச்சியது. புலவர் நாவில் புகழுடைந்திருந்த தமிழைத் தம் எளிய நடையால், இனிய ஓசையால் பொது மக்கள் நாவில் பொலிவடையச் செய்து, 'தமிழுக்குத் தொண்டு செய்தவன் சாவதில்லை' என்ற கூற்றினை உறுதியாக்கியவர் பாரதி. சுருங்கக் கூறின் கவிதைத் தமிழில், உரைநடைத் தமிழில், மேடைத்தமிழில் எல்லாம் 'பாரதித் தமிழே' இயங்கியது. கடந்த நூற்றாண்டின் ம்தமிழியக்கத்திற்கு கதாநாயகன் பாரதியே! 'தமிழால் பாரதி தகுதிபெற்றதும், தமிழ் பாரதியால் தகுதிபெற்றதும்' உணர்வது எளிது உரைப்பது அரிது. பொருள் வளமில்லாது வாழ்க்கையோடு போராடியவர் பாரதி. ஆனால் தமிழ் மொழிக்கோ அளவற்ற வளங்களைச் சேர்த்தவர். உரிய நேரத்தில் – உரிய முறையில் தமிழகம் பாரதியை பயன்படுத்தியிருந்தால் தமிழகமும், தமிழ்மொழியும் மேலும் பெரும்பயன் பெற்றிருக்கும்.

பாரதியின் வரலாறு தமிழ் இலக்கியத்தின் வரலாறாயிற்று தேசியப் போராட்டத்தின் வரலாறாயிற்று; சீர்திருத்தச் சிந்தனைகளின் வரலாறாக தோற்றம் கொண்டது. நாற்பதாண்டுகள் கூட முழுமையாக வாழாமல், குறைந்த ஆயுளில்

தேசிய கவியாகப் பரிணமித்து, மகாகவியாக மலர்ந்து மணம் பரப்பியது பதினாறு ஆண்டுகளில்தான். இந்தப் பதினாறு ஆண்டு காலத்தில் அவர் படைத்தளித்த கவிதைகள்தான் அழியாப் புகழ் படைத்த அமர கவிஞனாக்கியுள்ளன.

## அறிவியல் கோட்பாடு

"ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அதன் 'அணுகுமுறை' (Approach) எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் முழுமையாக உணரவில்லை. மேலை நாட்டினர் கடந்த மூன்று நூற்றாண்டுகளில் அடைந்த உயர்வுக்கும், வளர்ச்சிக்கும் அவர்களது அணுகுமுறையும் ஒரு முக்கியமான காரணமாகும். வளர்ச்சிப் பாதையில் கதவுகள் அடைபடுவதும், திறப்பதும் பல சூழ்நிலைகளில் நமது அணுகுமுறையைப் பொறுத்தது". காலத்திற்கேற்ற வளர்ச்சி; வளர்ச்சிக்கு உதவும் மாற்றங்கள்; மாற்றங்களை வரவேற்கும் மனப்பான்மை அது மலர்வதற்கேற்ற பார்வை அந்த பார்வையின் அடிப்படையில் அமைந்த அணுகுமுறை ஒரு சமுதாயத்தின் முக்கியமான தேவையாகும். அறிவியல் பார்வை மனித முயற்சியை வளர்ப்பது; நம்மைச் செயலுக்குத் தூண்டுவது துணை நிற்பது. ஆக அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டே ஏற்றமும் இறக்கமும் ஒருவருக்கு ஏற்படுகிறது. இத்தகைய அணுகுமுறை அறிவு சார்ந்த — அறிவியல் சார்ந்த — அணுகுமுறையே பாரதியை மற்ற சிந்தனையாளர்களிடமிருந்து வேறுபடுத்தியது.

> *"நன்மையும் அறிவும்*
> *எத்திசைத்தாயினும், யாவரே காட்டினும்*
> *மற்றவை தழுவி வாழ்வீராயின்*
> *அச்சமொன்றில்லை......"*

என்ற பாரதியின் இந்த அணுகுமுறை உண்மை நோக்கியது; மூவாயிரத்திற்கும் முந்திய ஆண்டுப் பண்பாட்டை வழிவழி வந்த

மரபுகளை, இந்த மண்படைத்த மகான்களை, அமரத்தன்மை கொண்ட காவியங்கள், கலைகள், தத்துவங்கள் என்பனவற்றின் ஆழத்தையும், அகலத்தையும் அறிந்தவர் பாரதி. இருந்தாலும், அதுவே எல்லாமாகிவிடுவதில்லை. வழிவழி வந்த யாவும் மார்க்கண்டம் பெறுவதில்லை. பயனிறந்தவைகளை நீக்கிட தயங்காது செய்தல் வேண்டும் என்பதைக் கூறுகிறார். 'வளர்ச்சி' என்பது மாற்றம். எனவே "வளரும் சமுதாயம் மாறுகிறது. மாறாத சமுதாயம் வளர்வதில்லை" – என்பது கல்வியாளர், செ. குழந்தைசாமியின் 'கூற்று; அன்றைய பாரதியின்,

*"காலத்துக் கேற்ற வகைகள் - அவ்வக்*
*காலத்துக் கேற்ற ஒழுக்கமும் நூலும்*
*ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் - எந்த*
*நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை"*

என்ற கருத்துக்கருவிலிருந்து தோன்றியதே. சில தலைமுறைகள் வரை நிலைப்பன சில. நூற்றாண்டுகள் வரை நிலைப்பன சில. ஒரு சில ஆயிரம் ஆண்டுகள் வரை நிலைப்பன சில. எனினும் எக்காலத்திற்கும், எல்லா நாட்டிற்கும் ஏற்புடைத்தன்மைஎன்று ஒன்றுமில்லை. 'தருமம் தலைகாக்கும்' என்பன போன்ற பொதுக்கருத்து எல்லாக் காலத்திற்கும் பொருந்தலாம். ஆனால் எது தருமம், எது தருமம் இல்லை என்பது வளர்ச்சிக்கு ஏற்ப மாறக் கூடியது. பாரதியின் இந்த சிந்தனையில்

*"பின்னும் மிருதிகள் செய்தார் அவை*
*பேணும் மனிதர் உலகினில் இல்லை*
*மண்ணும் இயல்பின வல்ல இவை*
*மாறிப்பயிலும் இயல்பின ஆகும்."*

என்று வருகிறது வைர வரிகளாய்.

## அறிவின் வெளிப்பாடு

அறிவின் அடிப்படையில் தன்நிலை தாழாத மானஉணர்வின், பெருமையின் அடிப்படையில் அமைந்த ஒழுக்கம் நிலையானது. அது நிறைகாக்கும் காப்பு நிலையான காப்பு; அறிவு வளர்ச்சியின் மூல ஆதாரமான கல்வியே ஆகும். மரபோ, மதமோ இதனை உருவாக்குவதில்லை. இதனை, "அறிவின் வலிமையே வலிமை; அறிவினால் உயர்ந்தோர்களை மற்றோர் இழிவாக நினைப்பதும் அடிமைகளாக நடத்துவதும் சாத்தியப்படமாட்டா" என்று 'தமிழ்நாட்டு மாதருக்கு' என்ற கட்டுரையில் கூறுகிறார்.

ஏழ்மை ஒரு தீமை இந்த நாட்டின் குறைபாடுகளுள் அது முக்கியமான ஒன்று. இதனை எப்படியாவது மாற்ற வேண்டும் மாற வேண்டும் என்பது பாரதியின் ஆசை. எப்படியாவது இந்த நாட்டைத் தமது வாழ்நாளில் வளமுடையதாக்க வேண்டும் வறுமையைப் போக்க வேண்டும் என்று எண்ணிய பாரதி 'புதிய உயிர்' என்ற கட்டுரையில் சகல ஜனங்களுக்கும் வயிறு நிறைய உணவு கிடைக்காத ஊரில் வாழும் செல்வர்களெல்லாம் திருடர். அங்கே குருக்களெல்லாம் பொய்யர். பண்டிதரெல்லாம் மூடர். மேன்மை நிலை பெற வேண்டுமானால் கைத்தொழில்கள் பெருகும்படி செய்ய வேண்டும். சாத்தியமில்லை என்று சொல்லி ஏங்குவதிலே பயனில்லை. எப்படியேனும் செல்வத்தை வளர்க்க வேண்டும் என்கிறார். பாரதியின் உள்ளுணர்வில் ஒன்றியிருந்த அறிவியல் அணுகுமுறை இயந்திர வளர்ச்சியையும், அறிவு வளர்ச்சியின் ஒரு பகுதியாகவே எண்ண வைத்தது. அறிவு வளர்ச்சியின் அடிப்படையில் ஏற்படும் மாற்றங்கள் பொதுவாக இயற்கையானவை; இயல்பானவை; ஏற்கப்பட வேண்டியவை; ஏற்றுப் பயன்படுத்த வேண்டியவை என்றே கருதி,

*"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே*
*இயந்திரங்கள் வகுத்திடுவீரே"*

என்று வேண்டுகோள் விடுக்கின்றார். ஆயிரம் ஆயிரம் தொழில்கள் செய்து, இந்த நாட்டின் செல்வத்தை வளர்க்க

விரும்பி,

*"அரும்பும் வேர்வை உதிர்ந்து புவிமேல்*
*ஆயிரம் தொழில் செய்திடுவீரே"*

என மனம்விட்டு பேசுகிறார். அறிவியல் சிந்தனையால் ஏற்பட்ட தொழிற்புரட்சி முன்னேற்றங்களை மேன்மைக் கலைகள் என்கிறார். இந்தக்கலைகளை – தொழில் நுட்பங்களை – அவற்றின் அடிப்படையில் ஏற்று பொருளாதார வளர்ச்சிக்கு உதவிட வேண்டும் என்று எண்ணி,

*"குடைகள் செய்வோம், உழுபடைகள் செய்வோம்*
*கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்"*

என்றும்,

*"நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்*
*ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்"*

என பேரவாக் கொண்டவராகக் காணப்படுகிறார்.

அறிவியல் வளர்ச்சி, மனிதனின் ஆற்றலில் அளவிறந்த நம்பிக்கையை உருவாக்கியிருக்கிறது. நிலமும் நீரும்தான் வளங்கள் என்றிருந்த நிலையிலிருந்து வளர்ந்து இன்று கல்வி எல்லா வளங்களும் தரும் தகுதி வாய்ந்தது என்ற நிலையை எட்டிக்கொண்டிருக்கின்றது. ஆனால் பாரதி தீர்க்க தரிசனமாக இவற்றை பறைசாற்றிவிட்டார். "அறிவுடையார் எல்லாமுடையார்" என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் கூறினார். "அறிவே ஆற்றல்" (Knowledge is Power) என்று 17ம் நூற்றாண்டில் பேகன் கூறினார். இவர்களை அடியொட்டி – ஆனால் விரிவாக மனிதனுக்கு அறிவு வேண்டும் அவை உயர்ந்தவையாகவும், பெரியவையாகவும் இருக்க வேண்டும் அவை வலிமையாகவும் இருந்து வறியவர்களாக உள்ள மக்களின் வாழ்வியலை உயர்த்த கனவு கண்டவர் பாரதி. இயற்கை

வளங்களில் வறியவர்களாக உள்ள மக்கள் தங்கள் வாழ்வில் உயர வழியுண்டு. ஆனால், அறிவில் வறியவர்களாக இருக்கும் மக்கட்கு எதிர்காலமில்லை என்பது பாரதியின் பன்முகப் பார்வையிலிருந்து புலனாகிறது.

## முடிவுரை

தான் ஈடுபட்ட துறைகளனைத்திலும் தமது கருத்தை, கனவை, ஏக்கத்தை, ஏமாற்றத்தை வெளியிடுவதற்குக் கவிதையைக் கருவியாகக் கொண்டவர் பாரதி. இலக்கியத் துறையில் வளர்ந்த ஒரு கவிஞர் இவ்வளவு பரவலாக பல அறிவுத்துறைகளில் ஆழ்ந்த ஈடுபாடும், தெளிவான சிந்தனையும் கொண்டிருந்தது அரிய ஒன்றாகும். இதனை சுருக்கமாக அவரே, "எமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல்" என்று கூறிவிட்டார். பாரதியின் பல்நிலை பரிமாணங்கள் யாவும் இன்று படிப்படியாக நிறைவேறிக்கொண்டுள்ளன. இத்தகைய வளர்ச்சி மாற்றத்தின் தாக்கங்களுக்கு வழிகாட்டியவர் புரட்சிக் கவிஞர் பாரதியே!

## மேற்கோள் நூல்கள்


1. மணி.பெ.சு. பாரதியாரும் சமூக சீர்திருத்தமும், திருமகள் நிலையம், சென்னை, 1992.

2. முத்துச் சிதம்பரம், ச. தமிழியல், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

3. தாமோதரன். அ

4. குழந்தைசாமி வா.செ. பாரதியின் அறிவியல் பார்வை, பாரதி பதிப்பகம், தி.நகர், சென்னை.

5. மகாலிங்கம் கா. பாரதியின் புகழ்பரப்பும் மா.பொ.சி. – முன்னுரை.

6. சுந்தரராஜன் பெ.கோ. கண்ணன் என். கவி.

7. வேங்கடசுப்பிரமணியன், ஆ.கி. தினமணி – நாளிதழ், 11.09.2002.

# வடகேரளத்தில் கண்ணகி கோயில்

முனைவர் கோ.வெ. கீதா
கல்லூரி முதல்வர்,
கே.என்.எம். அரசு கல்லூரி,
காஞ்சீரம் குளம்
திருவனந்தபுரம்.

கண்ணகி தமிழர் வாழ்வோடு பிணைந்துவிட்ட பெண், எனினும் கண்ணகி வழிபாடும், பாடல்களும் தமிழ் நாட்டைவிட கேரளத்திலே – சேரநாட்டிலே தான் இன்றும் உள்ளது.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயில் கட்டினான். சேரமக்கள் – கேரள மக்கள் நாடு முழுவதுமே கண்ணகிக்கு கோயில் எழுப்பி உள்ளனர். திருவனந்தபுரத்தில் ஆட்டுகால் பகவதி கண்ணகியின் வடிவமாகவே வழிபடப்படும் தெய்வமாகும். வடக்கே வயநாட்டிலும் கண்ணகி வழிபாடு காணப்படுகிறது. பாலக்காடு, கொடுங்கல்லூர் இங்கும் கண்ணகிக்கு ஆலயங்கள் உண்டு.

கோழிக் கோட்டிலிருந்து கண்ணனூர் செல்லும் தேசீய நெடுஞ்சாலையில், கொயிலாண்டிக் கொல்லம் உள்ளது. இது கோழிக் கோட்டிலிருந்து 30கி.மீ. தொலைவில் உள்ளது. தெற்கில் பிரபலமான கொல்லம் – கொய்லான் உள்ளது. இது வட கொல்லமாகும். இதனை பந்தலாயினிக் கொல்லம் என்றழைத்தனர். அண்மைக் காலம் வரை கொயிலாண்டி, பந்தலாயினி என்றே அறியப்பட்டது. அயினி மரமொன்று தன் கிளைகளைப் பந்தல் போன்ற அமைப்பில் பரப்பி நின்றதால், பந்தலாயினி என்றழைக்கப்பட்டது.

இங்கு பிழாரிக்காவு என்ற பெயரில் பிரபலமான கோயில் உள்ளது. பிழாரி எனும்பெயர் சமணசமயத்தோடு – தெய்வத்தோடு தொடர்புடையது என்று சிலர் கருதுவர். பிஷாரி என்பது விஷத்தை நீக்குபவன் அல்லது பாம்புப் பிடாரன் என்று பொருள்படும்.

தென்கொல்லத்தில் தேவிக்கு முதலில் கோயில் அமைத்த வைசியன் பிஷ – விஷவுரியாக இருந்ததால் கோயிலின் பெயர் விஷாரிக்காவு என்றமைந்தது எனலாம்.

வடகொல்லத்தில் சிவன் கோயிலில் பின்னாளில் தேவி சன்னதியும் அமைக்கப்பட்டது. சிவனின் சன்னதிக்கு தென்புறத்தில் பகவதிக்குரிய இரண்டு வாயில்கள் உள்ளன. நடு வாயிலில் நாந்தகம் என்றழைக்கப்படும் வாள் பீடத்தில் வைத்து பூசிக்கப்படுகிறது. பக்கத்து வாயிலில் தேவியின் திருவுருவச்சிலை காணப்படுகிறது. அலங்காரங்கள், உருவச்சிலைக்கு செய்யப்பட்ட போதிலும் தீபாராதணை, வழிபாடுகள் தேவிக்கும், வாளுக்கும் செய்யப்படுகின்றன. தேவியின் உருவம் சிறியதாக அமைந்த போதிலும் பத்ரகாளியின் தோற்றத்திலே அமைந்துள்ளது.

தென்கொல்லத்தில் வந்து குடியேறிய வைசியர்கள் பட்டு நெய்தும் பொன் வாணிகம் செய்தும் வாழ்ந்தனர். அவர்களுள் ஒருவன் ஸ்ரீபோர்கலி என்னுமிடத்தில் தேவியை வழிபட்டு நாந்தகம் என்னும் வாளினைப் பெற்றான். இவன் தென் கொல்லத்திற்கு திரும்பி பகவதிக்கு கோயில்கட்டி, அதில் இவ்வாளையும் வைத்து வணங்கினான். தேவியின் அருளால் வைசியர்கள் அரசனைவிட செல்வம் மிக்கவர் ஆயினர். செல்வ செருக்கால் அரசனை மதிக்காது வரி செலுத்தாது வைசியர்கள் இருந்தனர். இதனால் சினம் கொண்ட அரசன் வைசியர்களை நாட்டை விட்டே செல்லுமாறு உத்தரவிட்டான். வைசியர்கள் அனைவருமே தென் கொல்லத்தை விட்டு வெளியேறினரா என்பது தெரியவில்லை. எட்டு குடும்பங்கள் வடகொல்லத்தில் குடியேறியதாக நம்புகின்றனர். நாட்டை விட்டுப் புறப்பட்ட வைசியர்கள் கடல்வழியாகப்பயணம் செய்து கொண்டிருந்தபோது புலிகளும், பசுக்களும் சேர்ந்து வாழுமிடமொன்றைக் கண்டனர். அதுவே தாங்கள் வாழ்வதற்குரிய இடமென்று தீர்மானித்தனர். அவ்விடத்தை அரசனிடமிருந்து பெற்று அங்கு கோயிலும், குடியிருப்புக்களையும் அமைத்தனர். பழைய ஊரின் நினைவாக இவ்விடத்திற்கு கொல்லம் என்றும்

கோயிலுக்கு பிஷாரிக்காவு என்றும் பெயரிட்டனர். நாந்தகம் வாளினை தங்களோடு கொண்டு வந்திருந்தனர். அதை இங்கு பீடத்தில் வைத்து வழிபட்டனர். காலப்போக்கில் இவர்கள் தலைச்சேரி, மாகி, வயநாடு வரை வணிகத்திற்காகச் சென்றனர். சிலர் அங்கேயே தங்கிவிட்டனர்.

அண்மைக்காலம் வரை தேவிக்கு மாமிசம், கோழிபலிகள் முதலியன வழிப்பாட்டுப் பொருள்களாக இருந்தன. பெண்கள் மாலை நேரத்தில் கோயிலுக்குச் செல்ல தடை இருந்தது நம்பூதிரிகள்தான் கோயில் வழிபாடுகளை நடத்தி வந்தனர். பின்னர் மூசாது என்ற அந்தணர் பிரிவைச்சார்ந்தவர்களே இன்றுவரை பூசை செய்து வருகின்றனர். பிரதிஷ்டை தினத்தில் மட்டுமே நம்பூதிரிகள் பூசை செய்வர்.

மீனமாதத்தில் (பங்குனி) எட்டு நாட்களுக்குப் பரணிச்சடங்கு நடைபெறும். மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் இதனை காளியாட்டம் என்றும் குறிப்பர். சிவனை முதல் ஆறுநாட்களும் உற்சவமூர்த்தியாக யானையின் மீது எழுந்தருளச் செய்து ஊர்வலம் வருவர்.

7ஆம் நாளும் 8ஆம் நாளும் தேவிக்குரியது. ஏழாம் நாள் விழா 'வலியவிளக்கு' உற்சவம் என்றழைக்கப்படுகிறது. அன்று 'நாந்தகம் வாள்' – தங்கத்திலானது யானை மீது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் முழுவதும் தங்கத்தால் செய்யப்பட்ட நெற்றிப்பட்டம், பட்டுக்குடை, வெண்சாமரம், ஆலவட்டம் இவற்றுடன் விளங்கும் பிடியானை மீது கொண்டு செல்லப்படும். யானை எப்போதுமே பெண் யானைதான்.

வலிய விளக்கன்று மாகி, தலைச்சேரி போன்ற இடங்களில் வாழும் வைசியர்களும் ஊர் நோக்கித் திரும்புவர். இவர்கள் கோழிகளைப் பலியிடக் கொண்டு வருவர். வழி நடக்கும் துன்பம் அறியாது இருக்க 'கோழிநட' என்று பாடியபடியே வருவர். தற்போது கோழிப்பலி இல்லாத போதும், கோழிநட என்று

கூறியபடியே நடப்பர். இவர்கள் தங்குவதற்கென்று தனியிடங்கள் இன்றும் உண்டு.

நாந்தகம் வாள் ஊர்வலமாக ஐந்துமுறை சுற்றிவரும். முதல் சுற்றின்போது வைசியர்கள் மந்திரப் பாடல்களைப் பாடுவர். இரண்டாவது சுற்றில் தோற்றப்பாட்டும் பாடப்படும் மூன்றாவது, நான்காவது சுற்றினபோது கோமரம் தெய்வம் மேலுற்று குறி சொல்வர். வலிய விளக்கு உற்சவம் விடியவிடிய நிகழும்.

முன்பெல்லாம் கோயில் ஊரகத்தாரகவுள்ள எட்டு குடும்பத்தைச் சார்ந்த நாயர்பெண்கள் மட்டுமே விளக்கேற்றி வழிபடுவர். இன்று ஒரு வட்டம் நாயர் பெண்களும் மறுவட்டம் தீயர் இனத்தைச் சார்ந்த பெண்களும் நின்று நடனமாடுவர்.

எட்டாம்நாள் ஊர்வலம் மாலையில் தொடங்கி விடியும் வரை நடக்கும், முதல் நாள் போன்றே நாந்தகம் வாளும் பிடியானையும் அலங்கரிக்கப்படும். தொடர்ந்து பல யானைகள் செல்லும். முதலில் தல விருட்சமான பாலை மரத்தை அடையும். இங்கு நடனம் நடைபெறும். பின்னர் கொல்லத்தின் வீதிகள் வழியே ஊர்வலம் செல்லும். கோமரம் கொடு வாளினை கையில் பிடித்து தெய்வ அருள் கொண்டு ஆடிச்செல்வர். வணிக செட்டியார்கள் பட்டு வேட்டி உடுத்தி மார்பில் பூணூல் அணிந்து சரிகை வேலைப்பாடுகள் மிக்க சிவந்த தலைப்பாகை அணிந்து மந்திரப் பாடல்களைப் பாடியவாறு செல்வர்.

ஊர்வலம் கோயிலுக்குத் திரும்புவதை 'வரவு' என்பர். கோமரம் அருள்வாக்கு கூறிமுடிந்தவுடன், நாந்தகம் வாள் கோயிலினுள் வைக்கப்படும்.

இரவு சுமார் பன்னிரண்டு மணியளவில் மூசாது, பச்சை மாமிசம், அரிசி, பயறு இவற்றால் செய்த 'குருசி' என்னும்

உணவை கோயிலின் வடக்குப் பக்கத்தில் உள்ள சாவிற்குக் கொண்டு சென்று பூத கணங்களுக்குப்பலியாக வானத்தில் எறிவர். இந்நிகழ்ச்சி அரிங்காட்டு என்றழைக்கப்படுகிறது.

முன்பு ஆடுகளும், கோழிகளும் பலிகொடுக்கப்பட்டன. இன்று உயிர்ப்பலி தடைசெய்யப்பட்டுள்ளது.

## கண்ணகி தொடர்பு

1. கொடுங்கல்லூர் பகவதி மூத்த பகவதி என்றும் பிஷாரிக்காவு பகவதி இளைய பகவதி என்றும் நம்புகின்றனர். பிஷாரிக் காவு உற்சவ சமயத்தில் கொடுங்கல்லூர் பகவதி பிஷாரிக் காவிலுள்ள கிணற்றின் வழியாக வந்து இளைய பகவதியுடன் சேர்ந்து ஆடுவதாக மக்கள் நம்புகின்றார். கொடுங்கல்லூர் பகவதி கண்ணகியாகவே கருதப்படுவதால் 'இளைய பகவதியும்' கண்ணகி என்றே துணியலாம்.

2. வட கேரளத்தில் மாகி, தலைச்சேரி ஆகிய நகரங்களிலும் சுற்றுப்புறங்களிலும் வாழும் ஆரிய வைசிய செட்டியார்கள் பிஷாரிகாவு பகவதிகோயில் வழிபாட்டில் மரபு வழி உரிமையுடையவர்கள் எனக் கூறப்படுகின்றது. வலிய வீட்டுச் *சுப்பிரமணியன் என்னும்* பெயர் குறிக்கப்பட்டு இச்செட்டியார்களுக்கு அழைப்பு விடுத்த பின்பே விழா நடத்தப்படுவதாக பி.எல்.சாமி குறிப்பிடுகிறார்.

மேலும் இச் செட்டியார்கள் பாடும் பாட்டு தமிழ்ப் பாட்டுகளாக உள்ளன. இதனை இவர்கள் மலையாளத்தில் எழுதி வைத்துக் கொண்டு பாடுகிறார்கள். விருத்தம் எனக் கூறப்படும் இப்பாடல்களில் கண்ணகி கதை இடம் பெற்றிருப்பது குறிக்கத்தக்கது. பிஷாரிக் காவு கோயில் மலரிலிருந்து மலையாளப் பாட்டொன்றில் தமிழாக்கம் கீழே தரப்படுகிறது.

அ. ஆதிமுதல் காவேரிப் பூம்பட்டினத்து
ஆயிரவர் (வங்கிசத்தில்) வணங்கிய
அரிய கண்ணகை அம்மன் ஆகவேதான்
பிறந்து அதிருபமான பொழுது
தீதிலா கோவிலருடன் பாரியாளாகவும்
சிறிது காலம் சென்றபின்
திங்கள் முகமாய் வந்து தனக்காக
மதுரையில் சிலம்பு கூவிய நாளில்
(கூறிய)
நீதியரசன் நல் பாண்டியன் வாசலில்
நிகரற்ற மழுவரசனாம் நீத்திகை
புரக்கவே பாண்டியநாடு எத்தி நீ
நீராய் எரித்த சோதி
ஆதிகாலத்தும் மகிமையாய் நீ வந்த
அதிசயமும் யாரறிவரோ?
ஆனைக்குளம் வளர் பகவதி அம்மையே
ஆனந்த மகாமாயே

ஆ. அக்ரசால குளவளர் பகவதி அம்மையும்
ஆனைத் தளியில் தேவரும்
திக்கெல்லாம் புகழ்வரும் கொல்லத்து பகவதி
திசை வரைக்கல் பகவதி
தினம் துதி கொண்டாடும் புத்தூரில் அம்மையும்
ஸ்ரீ குறும்ப பகவதி
பக்கமது விளையாடும் நரேஸ்கேறி
பதிலளிக்கல் பகவதி
பரிபால கிருஷ்ணனும் கொடுங்கல்லூர்
அம்மையும்
பலகாலம் வாழும் நமக்கு
அக்னியிடம் பொருள் அரி சேர்த்திட
பாலனும் அடி பணிந்தருளும்
ஆனைக்குளக் கரை பகவதி அம்மையே.
ஆனந்த மகாமாயே.

இ. *கருத்த கூந்தலும் குப்பியும்*
*(காரெத்த)*
*தொங்கலும் கமலமுகவதன அழகும்*
*கயல்விழி கண்களும் முத்து மூக்குத்தியும்*
*காதினோடு குழையிழைகும்*
*பருத்த பூ முலை கழுத்தணி பதக்கமும்*
*(பரத்த)*
*நங்கை நாணமும் வஞ்சி கொங்கையும்*
*சிற்றிடை தன்னில் ஒரு மாந்தளிர் பொட்டிழைகும்*
*சீர்த்த தொந்தியும் பாத சலங்கையும்*
*செம்பவள மேனியழகும்*
*தேவியுன் பாதமே நண்ணுமடியேனுமே*
*சிந்தித்து வந்த க*
*நேரொப்பவாகவே இனி தருள் தந்து*
*அருள் மேவும் அபிராமி, கௌரி*
*நல்ல நாகமேவிய அனைவரது*
*ஆனந்தமான பொழினி.*

இப்பாடல்கள் வாய்மொழியாகப் பாடப் படுபவை. வரிவடிவம் இல்லை. இதனால் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். எனவே பொருள் தொடர்ச்சி இல்லை. எனினும் முதல் பாடலில் கண்ணகியின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் குறிக்கப்படுகின்றன. கண்ணகி இங்கு பகவதியாக காளியின் அவதாரமாகவே போற்றப்படுகிறாள். தோற்றப்பாடல்களில் கண்ணகியின் கதை கூறப்படும் போது பாண்டியனையும் தாருகனையும் அழிக்கவே காளி கண்ணகியாகப் பிறந்தாள் என்று கூறப்படுவது இங்கு நினைக்கத் தக்கது.

மேலும் கண்ணகிக்கு எழுப்பப்பட்டுள்ள பிற கோயில்களைப் பற்றி இங்கு சுட்டப்படுகிறது. ஆனைக்குளம் என்ற பெயரில் பகவதிகோயில் கோழிக் கோட்டிலும், பாலா என்னுமிடத்தில் கோட்டயம் பக்கத்தில் உள்ளதாகத் தெரிகிறது. பி.எல்.சாமி, சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லனின் குடில் பக்கம் தேவ கோட்டம் ஒன்று இருந்ததாகக் குறிக்கப்படுவதையும், அடியார்க்கு நல்லார் அதனை அக்கசாலைப் பள்ளி எனக்

குறித்திருப்பதையும் சுட்டி அக்ரசாலைக் குளவளர் பகவதி எனப் பாடுவதை மதுரையில் உள்ள தாகலாம் என்று கருதுகிறார்.

மூன்றாவது பாடல் கண்ணகியின் தோற்றத்தைக் குறிப்பதாக கொள்வது பொருத்தமாக இருக்கும். ஏனெனில் தொங்கும் காதிழைகு, சலங்கை, போன்ற தொடர்கள் பகவதிக்கோ, காளிக்கோ பொருந்தாது.

வைசிய செட்டிமார்கள் மொழியறியாது இன்னும் பாடும் பாடல்களில் கண்ணகி கோவலன் பற்றிய குறிப்புகள் உள்ளதை அறியமுடிகிறது.

3. இங்கு வாழும் வைசியர்கள் கூறும் கண்ணகி கதை புகழேந்திப் புலவர் இயற்றியதாகக் கூறப்படும் கோவலன் கதையோடு சில செய்திகள் ஒத்திருப்பதை பி.எல்.சாமி சுட்டுகிறார்.

அரசியின் சிலம்பு ஒன்றைப் பருந்து தூக்கிப் போகிறது. பிஷாரி ஒருவன் சிலம்பு விற்க வருகிறான். அது பகவதியின் சிலம்பாகும். அரசன் கோயில் நடையை அடைத்திருந்ததால் விளக்கு வைப்பது தடை செய்யப்பட்டிருந்தது. அங்கு வந்த வாணிகன் பிஷாரியைக் கொல்கிறான். அந்தத் தவற்றிற்காக கோவலனாகப் பிறக்கிறான். கண்ணகி அரசன் மகளாகப் பிறக்கிறாள். இதனாலேயே கண்ணகி, கோவலன் இணைந்து வாழவில்லை.

4. கொடுங்கல்லூர் பகவதி கண்ணகியாகவே கருதப்படுவதால் அவளின் தங்கையாக, இளைய பகவதியாக தொடர்பு படுத்தப்படும் பிஷாரிக்காவு தேவியும் கண்ணகியே என்று துணியலாம்.

5. கண்ணகி கேரளத்திலிருந்து சென்னை–திருவொற்றியூருக்கு சென்றதாகவும், அங்கு நீர் குடிக்க கிணற்றில் இறங்கியபோது கிணறு அடைக்கப்பட்டதாகவும் கூறுவர். கொடுங்கொல்லூர் பகவதி பிஷரிக்காவு உற்சவ சமயம்

கிணற்றின் வழியாக வருவாள் என்ற நம்பிக்கை இங்கு நினைக்கத்தக்கது.

6. கண்ணகியின் கதை, வழிபாடு இவை குறித்து கேரளத்தில் குறிப்புக்கள் தரும் செய்திகள், செட்டியார்கள் என்றழைக்கப்படும் இனத்தவர் தமிழ் நாட்டிலிருந்து (சோழ நாட்டிலிருந்து) குடிபெயர்ந்து கேரளத்தின் பல பகுதிகளில் குடியேறினர். இவர்கள் தாங்கள் அறிந்த கண்ணகியின் கதையைப் பாடல்களாகப் பாடி வழிபட்ட போது மலையாள நாட்டின் பகவதி வழிபாட்டோடு கண்ணகியை இணைத்து காளியின் அவதாரமாக மாற்றமடையச் செய்திருக்கலாம்.

பந்தலாயினிக் கொல்லத்தில் வைசியர்கள் கி.பி. 11–ம் நூற்றாண்டிலேயே குடியேறிவிட்டனர் என்பதற்கு தமிழ்கல்வெட்டுச் சான்றுள்ளது. எனவே பிஷாரிக்காவு கண்ணகியின் கோயில் என்று துணியலாம்.

7. மேலும் வடகேரளத்தில் கண்ணகி கதை நாடகமாக நடிக்கப்படும்போது பிஷாரிக் காவுவில் உள்ள பாலைமரத்தின் கீழ் நின்றிருக்கும் பொழுது கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேள்விப்பட்டு ஆவேசமாகச் செல்வதாக காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. கண்ணகி வேங்கைமரத்தினடியில் நின்றதாக சிலம்பு கூறும். எனவே பிஷாரிக்காவு, கண்ணகியோடு தொடர்புடைய இடமாகக் கருதலாம்.

8. தோற்றம் பாட்டில் தென்கொல்லத்தில் பிறந்த கண்ணகி கோவலனை மணந்து அவனுடைய ஊரான வட கொல்லத்திற்கு கப்பல்வழி வந்ததாகக் கதை உண்டு. எனவே வட கொல்லத்திலுள்ள பிஷாரிக் காவு கண்ணகி கோயில் என்று உறுதியாகக் கூறலாம்.

இங்கு கூறப்பட்டிருக்கும் செய்திகள் கட்டுரையாளர் பிஷாரிக்காவில் 5 மாதங்கள் தங்கி இருந்தபோது நேரில் கேட்டறிந்தவை.

# பழனிமலைத் தொடர்வாழ் பழங்குடி மக்கள் வாழ்வில் சேர நாட்டின் தாக்கம்

– ஆதி பாலசுந்தரன்,.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## 14. குன்னுவரின் கும்மிப்பாடலில் மோதகம், பூம்பொறைக் கோயில்

தைத் திங்கள், பூம்பொறை குழந்தை வேலப்பன் திருக்கோயிலில் குன்னுவர் பத்துநாள் திருவிழா நடத்துகின்றனர்.

முளைப்பாரிகள் முளைக்க வைத்து, அவற்றை கோயிலின் முன்னால் ஒரு வட்டம் இழைத்து அடுக்கி வைத்துச் சுற்றி நின்று குன்னுவர் பெண்டிர் கும்மியடித்து ஆடிப்பாடி மலைமேவு முருகனைப் போற்றுகின்றனர்.

இவ் ஆட்டம் பழம் 'குன்றக் குரவை'யையும் சிலம்பின் 'வாரக் கும்மி'யையும் நினைவுபடுத்துகின்றது.

(1) அப்பன் திருப்பதி சுப்பிரமணியன்
சப்பரம் வாரதைப் பாருங்கடி
சக்கரை முக்கரை மோதகத் தேங்காயை
(2) சன்னதி முன்னாலே தான் படைத்து....
அற்புதமான பூம்பாறை ஆனந்தக் கும்மி
நாடிவாங்க!..
(3) பூஞ்சோலைக் குள்ளே பூம்பொறை வேலவர்
பூவாலே மண்டபம் சோடனையாம்
பூஞ்சோலை நாதராம் புண்ணிய வேலர்க்கு
பூவாலே மண்டபம் சோடனையாம்
(4) முத்தாலே முத்தாலே செண்புகமாம் – நல்ல
மோகினி முத்தாலே செண்புகமாம்
(5) குங்குலியச் சோலையில் இருக்கும் வேலவர்க்குக்
குனிந்து கும்மிதண் தமிழ்பாட . . .
(6) புள்ளை யறுத்துக் கறிசமைத்து – நல்ல

பூச்சக்கரக் காவடி உண்டு பண்ணி
அறுத்த புள்ளை எடுத்துப் பேசுது
ஆண்டவன் சன்னதி முன்னாலே"

மலைக் குன்னுவர் பெண்களின் இந்தக் கும்மிப் பாடலில் நோக்கத் தக்கவை

(1) மோதகம் – தின்பண்டம் (மலையாள வழக்கு)

(2) பூம்பாறை – பூம்பொறை

(3) சோடனை – சோடித்தல் – அலங்கரித்தல் .

நெல்லையிலும், குமரியிலும் வழக்கில் உள்ளது.

(4) செண்புகம் – செண்பக மரம், மலர்.

(5) வேலர், வேலவர்

(6) தண்தமிழ் – தமிழ் நாட்டவரே மறந்து நிற்கும் தண்டமிழ்ச் சொல்

(7) சிறுத் தொண்டர் – பு(பி)ள்ளை அறுத்துக் கறி சமைத்து

பிள்ளைக் கறி சமைத்துச் சிவனார்க்குப் படைத்த சிறுத்தொண்டரின் சீரிய செயலையும்,

அறுத்த புள்ளை எடுத்து பேசுது – மாண்ட சீராளன் மீண்டு வந்த வியப்புச் செய்தியையும் சொல்கிறார்கள். எடுத்து – உயிருடன் எழுந்து 'அவளுக்குப் பிள்ளை பிறந்துள்ளது' என்பதை இம்மலைமக்கள் 'அவள் பிள்ளை எடுத்துள்ளாள்' என்று சொல்கிறார்கள்.

ஏடறியா, எழுத்தறியா, கள்ளம் கபடு அறியா இம்மலைமக்களுக்குக் கும்மிப் பாடல், மோதகம், தண்தமிழ், சிறுத்தொண்டரின் சிவத் தொண்டு இவையெல்லாம் எப்படித் தெரியும் ?.

"எழுதப் படிக்கத் தெரியாத மலைமக்கள் நாவிலும் சரஸ்வதி குடியிருக்கிறாள்!" என்று ஆன்மீக நோக்கில் இராச கோபாலாச்சாரியார் கூறுவது தான் நினைவுக்கு வருகிறது.

"சிறுத்தொண்டரை மலையாளத்தில் சிறுத்துண்டன் எனக் கூறுவர்" எனப் பேராசிரியர் கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

திருநாவுக்கரசரைத் திரிசூர் வட்டாரத்தில் 'முட்பொறுக்கிச் சாமி' என வழங்குவதும் உண்டு.

(8) பகவதி – "ஆச்சி கண்ணாச்சி
பகவதி யம்மனே"

–மலையாளத்துக்கே உரிய பகவதியம்மன் குறிக்கப் பெறுகிறாள். கண்ணுச்சாமி (சிவன்) போல, கண்ணாச்சி, கண்ணாத்தாள் – வருகிறாள்.

இக்கும்மிப்பாடலில், சேர நாட்டின் தாக்கம் தெரிகிறது. சிலம்பின் 'வாரக் கும்மி'யையும் நினைவுபடுத்துகிறது.

### 15. தாண்டி

"திருமகள் இருக்கை செவ்வனம் கழிந்து"–கழிந்து– தாண்டி என்னும் பொருள்படும் எனப் பேராசிரியர் கூறுகிறார். பல மலையடுக்குப் பகுதிகளைத் தாண்டி வந்து இங்கு வசிக்கத் தக்க ஓர் இடத்தை இம்மக்கள் தெரிவு செய்து குடியேறினர்.

இவ்விடம் 'தாண்டிக்குடி' என இன்றும் வழங்கப்படுகிறது.

### 16. சுள்ளியாறு

சேர நாட்டில் பாயும் பேரியாற்றின் கிளை ஆறு "சுள்ளியாறு".

கோடைக்கானல் மலைமீது 4500 அடி உயரத்தில், பண்ணைக்காடு ஊரைக் கடந்து வடக்கே மலைமீது ஏறி வடபுறத்தில் உள்ள தாண்டிக்குடி செல்லும் வழியிலும் ஒரு சுள்ளியாறு பாய்கிறது. அவ்வாற்றைப் பேச்சு வழக்கில் 'சுள்ளையாறு' என்கின்றனர்.

***பம்மையாறு*** கேரளத்துச் சபரிமலையில் பம்பையாறு

செல்வது போன்று, மேல்பழனிமலையிலும் "பாம்பாறு" என்னும் பெயரில் ஆறும் ஆற்றில் அருவியும் உள்ளன. தூண்மலைக்குச் செல்லும் வழியில் உள்ளன. 'பம்பையாற்றின்' மரூஉவாக இருக்கலாம். "சூரல் பம்பிய சிறுகான் யாறே" – நினைவுக்கு வருகிறது.

## 17. 'மோகினி முத்தாலே' - வான் அர மகளிர் மண்ணுலகம் வந்து நீராடல்

வேங்கை மரத்தின் கீழ் விண்ணக ஊர்தி வந்திறங்க அதில் ஏறி கண்ணகி விண்ணகம் புக்க செய்தியைச் சிலம்பு கூறும்.

அவ்வியப்பை நினைவூட்டும் வகையில் மேல் பழனி மலையில் 'தேவதை அருவி' (Fairy Falls) அமைந்துள்ளது.

## 18. மன்றில்

"மண்டில் வைத்துச் சத்தியம் செய்து குடுப்போம் என்கின்றனர் குன்னுவர். மன்றில் – மன்றம் – தூய தமிழ்ச் சொல்

"இடுமுள் வேலி எயினர் கூட் டுண்ணும், நடுவூர் மன்றத்தடி பெயர்த்தாடி" என்பது சிலம்பு.

## 19. கையெடுப்பு

தலைக்கு மேல் இருகரம் குவித்து வணங்குதலை இம் மலையினர் "கையெடுப்பு" என்கின்றனர். கையெடுத்து ஓச்சி – சிலம்பு.

மதிய நிலா : முழு நிலவை 'மதியநிலா' என்கின்றனர்.

## 20. கார்த்திகைத் திங்கள்

பழங்குடி 'மன்னான்' களுக்கு கார்த்திகைத் திங்கள் தான் ஆண்டு நிறைவுத் திங்களாகும்.

சேரநாட்டில் கார்த்திகைச் சுடர்ப் பேரொளி. கார்த்திகை ஒன்றில் நோன்பிருந்து மாலை அணிந்து கொள்ளுதல். பாலை

பாடிய சேரமான் பெருங்கடுங்கோ, சேரநாட்டு மலை உச்சியில் திருக்கார்த்திகை நன்னாளில் கார்த்திகைப் பேரொளிச் சுடர் கொளுத்தப்படுவதை அகத்தில் பாடுகிறார்.

## 21. மழை வேண்டும் மன்னாடி

வான் பொய்த்து மலை வறண்ட காலத்து, மங்கள மன்னாடி என்பவர், மழை வேண்டி வணங்கி மழை பொழியச் செய்ததாகச் சொல்கிறார்கள்.

வேளிர்மலை காணி இனத்தார் வள்ளுவனை வணங்கி மழை வேண்டுவதைப் போன்ற செயல் இது. மலைவாழ் பழங்குடி இனத்தார் எல்லாரிடமும் மழைவேண்டல் வழிபாடு உண்டு.

## 22. தேவராடி

பழனிமலைக் குறவர் இனத்தாருள் தம் பூசாரியைத் 'தேவராடி' எனக் கூறுவர். சாமி கும்பிடும் நாளில் இவர்களுக்கு *அருள் வரும் சாமி ஆடுவார்.*

"பழங்கடன் உற்ற முழங்குவாய்ச் சாலினி" – சாலினி – தேவராட்டி நினைவு வரும். சாலினிக்குத் தேவராட்டி பூசாரிக்குத் தேவராடி.

## 23. புலையர்

முற்காலத்திலேயே புலையர்கள் பச்சிலை மூலிகைகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றை நன்கு அறிந்தவர்கள். இவர்களின் ஆண் தெய்வம் கரியமால், கருமலையான் – தூய தமிழ்ச் சொற்கள். பெண்தெய்வம் கரகநாச்சி, பூத நாச்சி, நாகம்மா.

புலையர்கள் திருமண விருந்து *களியாட்டத்தில்* பாடும் பாடல்களைக் 'கலியாண பாணி' என்கின்றனர். சிலம்பில் 'தேவபாணி' வருகிறது. பண்ணோடு இயைந்தது பாணி.

குன்னுவர்கள் ஆடும் ஆட்டத்தைக் 'குன்னாட்டம்' என்கின்றனர். 'குன்றாட்டம்' என்பது தான் இது. சிலம்பில் வரும் 'குன்றக் குரவை' ஆட்டத்தின் மறுவடிவமாக விளங்குகின்றது.

புலையர்களுக்கும், சேரநாட்டுக்கும் உள்ள தொடர்பைச் சேர அரச மரபில் வந்தவரே உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

"திருவனந்தபுரம் பத்மனாப சுவாமி கோயில் அருச்சகர் கனவில் பத்மனாபசுவாமி கோயில் கருவறையில் ஏற்றப்படும் முதல் விளக்கு, புலைப் பெண்மணி ஒருத்தியின் இல்லத்திலிருந்து கொண்டு வந்து ஏற்ற வேண்டும் என்று சொல்லப்படும் செய்தி இங்கு நினைக்கத்தக்கது. (வரம் தரும் கேரள ஏழு கோயில்கள் – ராணி கௌரிலட்சுமிபாய் – ப–96).

## 24 நிறைவுரை

பழனிமலைத் தொடர்வாழ் பழங்குடி இனத்தவரிடையே சேர நாட்டுத் தாக்கத்தை, சிலம்பு கூறும் செய்திகள் சிலவற்றாலும், மலையாள நாட்டுப் பழக்கங்கள் சிலவற்றாலும் அறிய முடிகிறது.

## கட்டுரைக்கு உதவியவை


1. *மேல்மலை மக்கள் – செ. அன்னகாமு.*
2. சேரர் வரலாறு – பேரா. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை
3. சிலப்பதிகாரத்தில் மலைநாட்டு வழக்குகள் – ஆய்வுக் கட்டுரை – பேரா கி. நாச்சிமுத்து.
4. ஆதிவாசிகள் மறைந்த வரலாறு – பிலோ இருதயநாத்.
5. கட்டுரை ஆசிரியரின் சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் வழிபாட்டு வரலாறு – நூல்.
6. கட்டுரை ஆசிரியரின் கள ஆய்வுப் பணி – 1959 – 60.
7. கட்டுரை ஆசிரியரின் குளிர் தூங்கும் கோடைக்கானல் – *(Evergreen Kodaikanal)* வீடியோ ஒளிப்பேழை – 1990.

# *பின்இணைப்பு*

செப்புப் பட்டயம் – படிவம்.

## மேல்மலை மக்கள்

குன்னுவர்கள் மிகுதியாகவுள்ள இடங்களில் அவர்களின் பண்ணையில் வேலைசெய்யும் மக்களாகப் புலையர்கள் வாழுகின்றனர். ஆசாரிகள் என்ற இன்னொரு வகுப்பினர் குன்னுவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழுகின்றனர்.

## குல சேகர மந்திரி

ஆசாரிமார்களுக்கு வெகு காலத்துக்கு முன் ( சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்) குலசேகர மந்திரிப் பட்டம் கொடுக்கப்பெற்றதாயும், அன்றிருந்து அவர்கள் குன்னுவர்களின் மந்திரியாக இருந்து வருவதாயும் கூறுகிறார்கள். அது பற்றி மேல்பழனி மலையிலுள்ள போலூர் செப்புப் பட்டயத்தில் கீழ்க்காணும் செய்தி காணப் பெறுகிறது.

ஸ்ரீமது சாலிவாகன சகாப்தம் (4443) மேல் செல்லாநின்ற பிரபவ ஆவணி–மீ 21–ம் உ சாலோக சாமீப சாரூப சாயுஜ்யமாகிய அறுபத்து நான்கு திருவிளையாடல் தென் மதுராபுரிப் பட்டணம் ஜெகம் பெற்றிருக்கப்பட்ட, வால அம்பிகை மோள அம்பிகை, மீனாம்பிகை சொக்கலிங்கம் கிருபாகடாக்ஷத்தினால் அருளும் மகாநல்வரப் பிரசாதம் பெற்ற சந்திர குலாதிபனாகிய கனகபாண்டியன், குண பாண்டியன், புத்திரனான குலசேகர பாண்டியன் தென் மதுராபுரிவிட்டு எழுந்தருளியாகி வடமதுரை பொற்றாமரையில் உதித்த மீனாஷியம்மன் கிருபை கடாக்ஷத்தினால் முக்கால் பாக்கியமும் அஷ்ட அசுவரியமும் புருஷாள் ஆயுதம் போக விசேஷமும் விற்பன்ன விவேகம் பெற்ற விசால லஷணம் பொருந்தியிருக்கின்ற வாக்குடைய மஹா ராஜாவான தம்பிறான் மீனாக்ஷியம்மன்

மேல்நிலைப் பழியர் இனத்தாரின் வழிபடு தெய்வங்களுள் ஒன்றன் பெயர் உண்ணுவான் தம்பிரான் – மேல்மலை மக்கள். ப.30.

பாச்சலூர் – பால் சொலூர்–தர்சன லிங்கேசுவரர்

## *குன்னுவர்கள் அல்லது மன்னாடிகள்*

### *பன்றிமலை - வராககிரி*

வரத்தால் பாண்டிய ராஜா எழுந்தருளியாகி தினந்தோறும் ஒரு பிரதட்சணையும் மகா மலைகள் தோறும் தேசங்கள் தோறும் ஜீவாலயமும் உண்டாக்கிக் கொண்டு வருகிறபோது தென்பழனிமலை ஜீவகிரியோனுக்கு சந்நிதியான ஆவினன் குடிபிரதட்சணம் கோவிலும்கட்டி வைத்து அனேக தான தருமங்கள் செய்துகொண்டு வருகிறபோது, தென் பழனியைவிட்டு எழுந்தருளியாகி தம்பிறான் சமூகத்திற்கு வருகிறபோது என்னசெய்தார் என்றால், மகா மலைகள் தோறும் சிவாலயங்களும் ஊர்களும் தெப்பக் குளங்களும் அணை வாய்க்கால்களும் செய்து கொண்டு வருகிறபோது ஒருமேடும் பாறையும் சௌக்கியமாய் இருந்தது. கானகத்தை வெட்டுகிறபோது முன்னதாக நாகம் எழுந்தது. அதை வெட்டுகிறபோது ஒரு புலியும் குட்டியுமாக இருந்தது. அந்தப் புலியை வெட்டத் தண்ட வாலையும் அறுத்து தலைவாசலில் புதைத்து புலியிருந்த இடம் புகல் இடம் புகலூர் என்ற பெயருமிட்டு (தற்போது போலூர்) விக்னேஸ்வரர் கோவில் ஜீவாலயமும் கட்டிவைத்து அநேக தான தர்மங்களும் செய்துகொண்டு வருகிறபோது, செல்வனாசாரி ஒருவன் கூடவே சிற்பி சாஸ்திரம் பார்த்துக் கொண்டு வருவான். அவனுக்குத் தம்பிரான் கட்டளையிட்டது. வெள்ளிப்புடி சூரிக்கத்தியும், பட்டு வளையம் தங்க வளையம் கொடுத்து தன் சொந்த அடிமைப் பிள்ளையென்றும், குமார வர்க்கமென்றும் குலசேகர மந்திரி என்றும் பெயருமிட்டு திருக்கைச் சிறப்புங் கொடுத்து வாள் பரிசையும் புலிப்பரிசையும் செப்புப் பரிசையுங் கொடுத்து, உக்ராண விசாரணையும், ஊர் விசாரணையும் கொடுத்து பாகம் சொல்லி வைத்துக் கொண்டோமாகவும் உபயம் உத்தாரம் அவ்விடத்திருந்த புல்லவனென்றேனை அழைத்து, புல்லந் திண்ணி மன்னாடி என்ற

பெயருமிட்டு, பட்டு வளையமும் கொடுத்து இருவரும் ஒன்றுபோல் ஒருவர் சொல் ஒருவர் மீறாமல் பேதா பேதங்கள் செய்தால் நசிஞ்சு கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்குஆளாவீர்கள் என்று கட்டளை இட்டோமாகவும் இப்படி மலை உண்டு செய்த பேர்களை எதிரிகளை ஜெயித்த எங்களை மேட்டுக் கொருவனாக இருந்தவர்களை புகலூரிலே இருத்தி அந்த ஊரில் எங்களுக்கு எந்த ஞாயத்துக்கும் சரிபெற்ற பச்சைக் ·கொடியும் வாள் இம்பட்டை கானகத்தை வெட்டி குடைகறை பூனையாத்துக்குக் கொடுத்தார்கள். எங்கள் ஊருக்கு நாக நாயக்கத் தம்பிரான் ஊத்தாம் பாறையும் கொடுத்தார்கள். எங்கள் வம்சம் உள்ளளவும் தம்பிறான் திருப்பதம் பணிவோமாகவும் பட்டணங்கள் காக்கத் தக்கதாக பச்சை அளவு மன்னாடி படியில் இருப்போமாகவும், தம்பிறான் முன் நாங்கள் எதையும் வெட்டுவதாக தக்கதாக ராஜா ரத்து செய்தார். சபைக்கட்டுத் தடுப்போம். எவனாகிலும் இவ்வார்த்தை தப்பினால் அவனுக்கு நாங்கள் அவன் வாய் மடக்க மனுப்பிறந்தோமாகவும். நம்மிட ஆள் குன்னுவர் வெள்ளாமையர் தவங்கொண்ட பெருமாள் மகன் குடியான். புல்லனு மன்னாடியார். போருக்கெல்லாம் இருந்தவர்க்கும் உபயம். பாம்பாடும் பாறை சட்டப் பாறை மயிலாடும் பாறை திரிக்கூட்டுமலை பன்றிமலை பெரியூர் தோட்டிவளை நய்யாத்துமலை செக்கரானை காட்டுப் பிள்ளையார் கோவில் துக்கல். சூதாடுங்கள் சொக்கநாதர் மலை சக்கரைக்கல் யூத்தம்பாறை கொட்டகுடி எல்கை உபயம். யிருதாயுத்திரம் பாரியகவை பாம்பாடும் பாறை சின்னமுடி பெரியமுடி குதிரையாகுமனை கரக்கரவு மொகள் எல்லைக்குறி. கும்பூரு குட்டிவேலு மன்னாடி மன்னவனூர் பறவத்த மன்னாடி கவுஞ்சி செம்பத மன்னாடி பூண்டிகரிய மன்னாடி கிளாவரை சந்திர மன்னாடி கூக்கால் குட்டி மன்னாடி பூம்பாறை புகழ மன்னாடி புத்தூர் பழனிமன்னாடி வில்லுப்பட்டி சவுக்கு மன்னாடி இவ்வூர் கிராமங்களுக்கு அஞ்சவிடோம். ஆள் விடுதி பார்த்து ஆண்டு ஒன்றுக்கும் கலியாணமும் ஆயிரப்பணமும் அழிப்போமாகவும். திருப்பாதத்துக்கு முதல் கிராமம் புகலூர் பேருக்கு 1. நாகவாள் பரிசை உபயம் மேல் 1. தம்பட்டம் 2. மடி துத்தாரி

### குன்னுவர்கள் அல்லது மன்னாடிகள்

பாங்கு 1. இவ்வளவும் கொடுத்தோம். கண்டங்களின் விபரம், ஒப்பஞ்சி மேமலை வயல் வறையடி வண்ணாத்திக்கல் எல்கை. வெள்ளைப்பூடுக் கண்டம் முடியங்கவை நிலம் குண்டுப் புலியடித்த இடம் குண்டுப்பட்டியில் உக்ராணம் கட்டிக்கொண்டு இருப்பீர்களாகவும். ஆதாரம் செப்புக்கல் வெட்டிக் கொடுத்தோமாகவும். ராஜாவை யாவரும் காத்துக் கொண்டு இமையும் நேத்திரமும்போல் ஒருவருக்கொருவர் ஒருவர் சொல்லை ஒருவர் மீறாமல் இருங்கள். மீறி பேதாபேதம் செய்தால் நசிஞ்சு கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவார்.

இவ்வூரில் மீனாம்பிகை அருளினாலும் தம்பிறான் *வாக்கினாலும்* செந்நெல் *விளைந்து ஜெயமடைந்திருக்கச் சுபம் சுபம்* சுபம். கடவுள் துணை.

ஆராய்ச்சிக்குரிய இந்த சாசனம் முழுவதுமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து பல உண்மைகள் கிடைக்கின்றன. நமக்கு இப்பொழுது வேண்டியது குன்னுவர் வந்து குடியேறிய பின்னர் ஆசாரிகள் வந்தனர். இரு வகுப்பினரும் ஒருவர் சொல்லை ஒருவர் கேட்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குப்பின் முதலியார் என்ற வகுப்பினர் மலைமேல் குடியேறி சில இடங்களில் மன்னாடிகளின் மந்திரிகளாக இருந்து வருகின்றனர்.

### நில உடைமை

ஆதியில் குன்னுவர்களும் இடம் விட்டு இடம் பெயர்ந்து வசித்து வந்தனர். அப்பொழுது நிலம் யாருக்கும் சொந்தமில்லாதிருந்தது. பூமிதானத் தந்தை விநோபா கூறுவதுபோல், உலகிலுள்ள நில மனைத்தும் உலகநாதன் உடைமை யாக விருந்தது. எவருக்கும் பட்டா கிடையாது.

# பாரதிதாசனும் இதழ்களும்

முனைவர் நெல்லை ந.சொக்கலிங்கம்

## தமிழ் இதழியலின் தோற்றம்

இந்திய நாட்டை பொறுத்தவரை அச்சுக்கலை முதன்முதலில் தமிழ்மொழி வாயிலாகவே பரவி இருக்கிறது. தமிழ்மொழிக்குரிய அச்சு எழுத்துகள் செர்மன் நாட்டிலேதான் முதலில் உருவாக்கப்பட்டன. நெல்லை மாவட்டத்தில் புன்னைக்காயலில் அச்சகம் ஒன்று நிறுவப்பட்டுத் 'தமிழ் போர்ச்சுகல் மொழி அகராதி' அங்கு வெளியிடப்பட்டது. அடுத்துத் தரங்கம்பாடியிலே நிறுவப்பட்ட அச்சகத்தின் வாயிலாக 1714–ஆம் ஆண்டு 'விவிலியத்தின் புதிய ஏற்பாடு' என்ற தமிழ்நூல் வெளியாயிற்று. இதனைத் தொடர்ந்து 1831–ஆம் ஆண்டு 'தமிழ் பத்திரிகா' என்ற திங்களிதழைச் சென்னைக் கிறித்துவக் கழகத்தார் வெளியிட்டனர். இப்படித் தொடங்கப்பட்ட முதல் தமிழ் இதழ் 'தமிழ் பத்திரிகா' தொடங்கி இந்தியா விடுதலை பெற்ற நாள்வரையிலும் தட்டுத் தடுமாறியும் சவலைப்பிள்ளையாகவும் தமிழில் இதழியல் வளர்ந்து வந்துள்ளது. இவ்வகையில் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் இருபதின் முன்பாதியிலும் பல்வேறு சமயச்சார்புடைய இதழ்களே பெரிதும் வெளியிடப்பட்டன. ஆங்கிலச் சூழ்நிலையின் அடித்தளத்தில் தமிழில் இலக்கிய இதழ்கள் மெல்ல மெல்ல அரும்பத் தொடங்கின. 1902–இல் மறைமலையடிகளாரின் 'அறிவுக்கடல்', 1903இல் மதுரைத் தமிழ்ச்சங்கச் 'செந்தமிழ்', 1923–இல் சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகச் 'செந்தமிழ்ச் செல்வி', 1925–இல் கரந்தைத் தமிழ்சங்கத் 'தமிழ்ப்பொழில்' எனத் தமிழில் இலக்கிய இதழ்கள் சில வெளிவரலாயின. இலக்கியக் கருத்துகளை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற அழுத்தமான நோக்கத்தில் தொடங்கப்பட்ட இதழ்கள் மேலே குறிப்பிடப்பட்ட இதழ்களாகும்.

இத்தகைய பின்புலத்தின் சூழலிருந்து பாரதிதாசனாரின் (1891–1964) இதழியல் தொண்டினைக் காண்பது நன்று. புதுவையிலே பாரதியுடன் இவருக்கு ஏற்பட்ட தொடர்பையும் இங்கே நாம் கருத்தில் கொள்ளவேண்டும். பாரதியார் 'இந்தியா' என்ற இதழைப் புதுச்சேரியிலிருந்து அப்போது வெளியிட்டு வந்தார். சுப்பிரமணிய சிவா 'ஞானபாநு' என்ற மாத இதழையும்,

'இந்தியதேசாந்திரி' என்ற வார ஏட்டையும் நடத்தினார். பரலி சு. நெல்லையப்பர் 'பிரபஞ்சமித்திரன்' என்ற இதழை நடத்தி வந்தார். இதே காலகட்டத்தில் திரு.வி. கலியாணசுந்தரனார் 'தேசபக்தன்' (1917) என்ற நாளேட்டையும், 'நவசக்தி' (1920) என்ற திங்களேட்டையும் தொடங்கி நடத்தி வந்துள்ளார். செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் கூட ஒட்டப்பிடாரத்திலிருந்து 'சுயராச்சியம்' என்ற இதழைத் தொடங்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அவ்வெண்ணம் நிறைவேறாமற் போய்விட்டது என்கிறார் திரு.மா.சு. சம்பந்தன் (தமிழ் இதழியல் வரலாறு, ப. 254). இந்திய மக்களின் – குறிப்பாகத் தமிழ் மக்களின் உள்ளங்களில் உரிமையுணர்வை விதைக்க வேண்டும் என்ற வேட்கையில் எழுந்த தமிழ் இதழ்கள் இவை. ஒரு பக்கம் இலக்கிய உணர்வும் மற்றொரு பக்கம் நாட்டு விடுதலையுணர்வும் இணைந்த புறச்சூழ்நிலைகள் பாவேந்தர் பாரதிதாசனாரையும் இதழ் தொடங்கத் தூண்டியிருக்க வேண்டும். பாரதியாருடன் நெருங்கிப் பழகிய பழக்கம் பாரதிதாசனையும் ஒரு தமிழ் இதழ் தொடங்க உந்து சக்தியாக இருந்திருக்கும் எனக் கருதலாம். ''இலக்கியம் எளிமையாக்கப்பட்டு, அதில் சுவை ஏற்பட்ட பின்பு, கவிதைகளும் எளிய நடையில் வெளிவரத் தொடங்கின. இதற்கு அடிகோலியவர் பாரதியார். அவரைத் தொடர்ந்து பாரதிதாசன், கொத்த மங்கலம் சுப்பு, கவிஞர் கண்ணதாசன், சுரதா, வாணிதாசன், முடியரசன் போன்றவர்கள் தோன்றினார்கள். கவிதை எழுதுவது என்பது, குறிப்பிட்ட சிலரால்தான் முடியும் என்ற நிலை மாற்றம் அடைந்தது. பலவகையான கவிதை இதழ்களும் தோன்றின'' என்னும் கருத்து இவண் இணைத்துக் காணத்தகும்.

## தமிழில் கவிதை இதழ்கள்

உரைநடையில் வந்த இதழ்களை விரும்பிப் படிப்பாரைப் போலக் கவிதை இதழ்களைப் படிப்பவரும் அக்கால கட்டத்தில் ஆர்வம் காட்டியிருக்க வேண்டும். அவ்வார்வத் துடிப்பின் வெளிப்பாடுதான் முழுவதும் கவிதைகளையே கொண்ட இதழ்களை வெளியிட உறுதுணையாக இருந்திருக்க வேண்டும். இதனை வலியுறுத்தும் வண்ணம் அமைகின்றது திரு. மா.சு. சம்பந்தன் என்பார் கூறும் கருத்து. அது வருமாறு ''மகாகவி பாரதியைத் தொடர்ந்து தமிழகத்தில் கவிதை மூலம் நாட்டு

மக்களுக்குப் புதிய உத்வேகமும், உணர்வும் ஊட்டிய புத்துலகக் கவிஞர் பாரதிதாசன்தான். பாரதிதாசனின் கவிதை நடை எளிமையானது, விறுவிறுப்பானது, மேலானது. அவற்றின் உள்ளடக்கம் பெரும்பாலும் மக்களைத் தட்டி எழுப்புவதாகவே இருந்தது' என்னும் 'தாமரை' இதழின் கருத்து இங்கே எண்ணத்தகும் (தமிழ் இதழியல் களஞ்சியம், ப. 263).

பாவேந்தர் பாரதிதாசன் தம்முடைய வாழ்நாளில் மூன்று இதழ்களுக்கு ஆசிரியராக விளங்கினார். அவை,

1. 1930–இல் புதுவை முரசு (வார இதழாகும்)

2. 1935–இல் ''ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம்'. இதுவே தமிழில் வந்த முதல் பாட்டேடு. இதற்குச் சர்வோதயத் தலைவர் திரு. எஸ்.ஆர். சுப்பிரமணியம் உறுதுணையாக இருந்தார்.

3. 1947–இல் புதுக்கோட்டையிலிருந்து 'குயில் என்னும் திங்கள் இதழைக் கொண்டு வந்தார். அப்போது ஒன்றிரண்டு இதழ்களே வெளிவந்தன.

1958–ஆம் ஆண்டில் 'குயில்' கிழமை ஏடாக மாற்றம் பெற்றது. இதனைப் பாவேந்தர் புதுவையிலிருந்தே வெளியிட்டார்.

1962–இல் சென்னையிலிருந்து மீண்டும் 'குயில் வெளிவந்தது.

மேற்கண்ட மூன்று இதழ்களுடன் பாரதிதாசன் நேரடித் தொடர்புடையவராக விளங்கியுள்ளார். இவற்றுள் 1935–ஆம் ஆண்டு பாரதிதாசன் தொடங்கிய ''ஸ்ரீ சுப்பரமண்ய பாரதி கவிதாமண்டலம்' என்றஇதழ்தான் தமிழில் முதன்முதலில் கவிதை இதழாக வந்தது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இவ்விதழ்கள் யாவும் 'சிற்றிதழ்கள்' என்றவகையில் அடங்கும்.

1987–ஆம் ஆண்டில் வெளிவந்த திரு.மா.சு. சம்பந்தனின் 'தமிழ் இதழியல் வரலாற்றில்' ''15 கவிதை இலக்கிய இதழ்களும் வெளிவருகின்றன'' (ப. 28) என்றகுறிப்புக் காணப்படுகின்றது. இதே நூலில் கவிதை இதழ்களின் பட்டியல் (ப. 186) ஒன்றும் தரப்பட்டுள்ளது. அப்பட்டியல் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1935 | ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் | பாரதிதாசன் | புதுவை |
| 1940 | குயில் | பாரதிதாசன் | சென்னை |
| 1955 | காவியம் | சுரதா | சென்னை |
| 1958 | இலக்கியம் | சுரதா | சென்னை |
| 1963 | ஊர்வலம் | சுரதா | சென்னை |
| 1964 | கவிதை | தெசிணி | சென்னை |
| 1964 | கவிப்புனல் | சுந்தரமூர்த்தி | சென்னை |
| 1966 | முல்லைச்சரம் | பொன்னடியான் | சென்னை |
| 1966 | சுரதா | சுரதா | சென்னை |
| 1971 | எழிலோவியம் | பண்ணுருட்டி பரமசிவன் | சென்னை |
| 1971 | கவிதா மண்டலம் | வானம்பாடி | சென்னை |
| 1980 | கவிக்கொண்டல் | மா. செங்குட்டுவன் | சென்னை |

**புதுக்கவிதை இதழ்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1964 | நோக்கு | – | – |
| 1965 | கவிஞன் – | – | |
| 1972 | வானம்பாடி | – | – |
| 1972 | செம்பரிதி | – | – |

இப்பட்டியலில் சுட்டப்படாத பிறர் குறிப்பிட்டுள்ள சில கவிதை இதழ்கள் வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| 1930 | புதுவை முரசு | பாரதிதாசன் | – |
| 1972 | வண்ணங்கள் | – | – |
| 1967 | உலா | – | – |
| 1973 | ஐ | – | – |
| 1973 | பனித்துளிகள் | – | – |
| 1974 | தெருக்கூத்து | – | – |

"கவிதை இதழ்களைப் பொறுத்தவரை தமிழகத்தில் பலவும் தோல்வியே கண்டன. முழுக்க முழுக்க கவிதைகளைக் கொண்ட தமிழக இதழ்கள் எதுவும் இலாபகரமாக இயங்கவில்லை என்பது கண்கூடு" என்று மணிமேகலைப் பிரசுரத்தாரின் 'இந்தியப் பத்திரிக்கைகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்றநூல் (ப. 93) கூறுவதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் ஒருமித்த ஒப்பற்றபாராட்டைப் பெற்று வாழ்ந்த பாவேந்தரின் கவிதை இதழ்களுக்கும் மேற்கண்ட நிலையே ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை.

தொடரும்

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

முனைவர். திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர். திரு. சுப. அண்ணாமலை

முனைவர். திரு. ம.ரா.போ. குருசாமி

முனைவர். திரு. அ.அ.மணவாளன்

முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர். திரு. செ. கந்தசாமி

முனைவர். திரு. க. சின்னப்பா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

# மதுரைத் தமிழ்ச்சங்க

# நூற்றாண்டு மலருக்கு

**தமிழ், தமிழ்ப் பண்பாடு,**
**தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்**
**மற்றும்**
**வள்ளல் பாண்டித்துரைத் தேவர்**
**குறித்த கட்டுரைகள் அனுப்ப**

**தொடர்பு முகவரி**


பதிப்பாசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-5575615

முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை-1.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 1.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,

59. திரு. நா. பாலுச்சாமி,
16, ஜவஹர் சாலை,
காந்தி நகர்,
மதுரை 625 020.